For Private Circulation Only

மே 2012 மலர் 5 இதழ் 3

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY





## மாஸ்டரின் அறிக்கை

பிப்ரவரி 18, சனிக்கிழமை காலை சுமார் 10.30 மணிக்கு, மாஸ்டர் காயத்ரியிலிருந்து ஆசிரமத்திற்கு வந்தார். சத்சங்கம் அப்போதுதான் முடிவுற்றிருந்ததால், அப்யாசிகள் அவரை வரவேற்பதற்காக வரிசையாக நின்றிருந்தனர்.

மாஸ்டர், IT பணிமனை செயல்முறைகளை அலுவலகத்திலிருந்தபடியே, சிசிடிவி வழியாக பார்த்தார். சகோ.கமலேஷ் மற்றும் சகோ.கிருஷ்ணா ஆகியோரால் வழங்கப்பட்ட உரைகளைக் கேட்டார். அவர் உரைகளை முழு ஈடுபாட்டுடன் கேட்டு, கேள்விகளும் கேட்டார். அடுத்த நாள் சத்சங்கத்திற்கு பிறகு, சில புதிய DVDக்கள் வெளியிடப்பட இருப்பதாக, இரவு உணவிற்குப் பிறகு, மாஸ்டரிடம் தெரிவிக்கப்பட்டது. "ஒலி-ஒளி குறுந்தகடுகளை வெளியிடுவதை, தயவுசெய்து மற்றவர்களை கொண்டு செய்யுங்கள். இப்போதிலிருந்து பிராணஹுதி அளிக்க மட்டுமே நான் வருகிறேன். அஞ்சல் செய்யப் பயன்படும் தந்தி தபால் போல் தான் நான் "என்று பதிலளித்தார். பிப்ரவரி 19, ~ஞாயிற்றுக்கிழமை அன்று, மாஸ்டர் காலை சத்சங்கம் நடத்தினார். பிறகு, சில ஒலி-ஒளி குறுந்தகடுகள், புத்தக வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப்பட்டன.

## வட அமெரிக்கர்களுக்கான கருத்தரங்கம்

பிப்ரவரி 20, திங்கட்கிழமை அன்று, வட அமெரிக்கர்களுக்கான கருத்தரங்கம் தொடங்கியது. உடல்நிலை சரியில்லை என்ற போதிலும், மாஸ்டர் காலை சத்சங்கம் நடத்தினார். மாலையில், அமெரிக்காவிலிருந்து வந்த புதிய அப்யாசிகளின் குழு ஒன்று, தியானகூடத்தில் குழுமியிருந்தது. மாஸ்டர் அவர்களை சந்திக்க மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தார். அவர்களுக்கு உற்சாகமூட்டும் உரை ஒன்றை வழங்கினார். அது அனைவரின் இதயத்தையும் தொட்டது. அமெரிக்கர்களுக்கான கருத்தரங்கத்தின் வார நாட்களின் போது, மாஸ்டர் ஒவ்வொரு நாள் காலையும், மூன்று பிரிபெக்டுகளை தயார்படுத்திக் கொண்டிருந்தார். அது அவருக்கு மிகவும் களைப்பை ஏற்படுத்தியது. அவர் களைப்புடனும் உடல் நலமில்லாமல் இருந்தபோதிலும், தொடர்ந்து வேலை செய்து கொண்டிருந்தார்.



பிப்ரவரி 21, செவ்வாய்க்கிழமை அன்று, மாஸ்டர் தியானக்கூடத்தில் AGM கூட்டத்தில் கலந்துகொண்டு, "உங்கள் முழு இதயத்தையும் அளியுங்கள்" என்ற தலைப்பில் ஆற்றல் மிக்க உரையை வழங்கினார். அந்த உரையிலிருந்து சில துளிகள் வருமாறு:

- சகஜ மார்க்கத்தில், நாம் நமது முயற்சியால் மட்டுமே மதிப்பீடு செய்யப்படுகிறோம். நம்மால் எதைச் சாதிக்க முடியும் என்பதால் அல்ல.
- அன்பை கொடுப்பதற்கு எந்த ஒரு விலையும் இல்லை. ஆனால் நாம், அதைத்தான் கொடுக்காமல் வைத்துக் கொள்கிறோம்.
- கடவுள் நமக்கு, மகிழ்ச்சிக்காக ஒன்றையும் கொடுக்கவில்லை. ஐம்புலன்களில் எந்த ஒன்றையும் மகிழ்ச்சிக்காக பயன்படுத்துவது கூடாது. ஐம்புலன்களும் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காகவே இருக்கின்றன.
- ஆன்மீகம், உங்களுக்கு இதயத்தை உடைபடாமல் வைத்திருப்பதற்கு உதவுகிறது.

பிப்ரவரி 22, புதன்கிழமை அன்று மாஸ்டர், சகோதரி கஸ்தூரி அவர்கள் காலமான செய்தியைப் பெற்றார். ஹைதராபாத் ஆசிரமத்தில், ஒரு இளம்வயது அப்யாசி கீழே விழுந்து இறந்து விட்டதாலும் அவர் மிகவும் வருத்தமுற்றிருந்தார்.

கருத்தரங்க வார நாட்களில் ஒரு நாள், மாஸ்டர் படுக்கைக்கு செல்வதற்குமுன், "இது எனக்கு சிவராத்திரியாக இருக்கப்போகிறது" என்று கூறினார். அதன் பொருள் என்னவெனில், நல்ல உறக்கம் இருக்கப் போவதில்லை என்பதாகும். அடுத்த நாள் மாஸ்டரின் மருத்துவர், அவர் இரவு முழுவதும் உறங்கவில்லை என்று கூறினார். வழக்கம்போல மாஸ்டரை சந்திக்க விருப்பம் கொண்டு சாரிசாரியாக வந்த அப்யாசிகளை, அவரால் எப்போதெல்லாம் முடிந்ததோ அப்போதெல்லாம் இயன்றவரை சந்தித்தார்.

மார்ச் 1ம் தேதி, வியாழக்கிழமை அன்று, காலை உணவிற்குப் பிறகு, மாஸ்டர் பேசிக்கொண்டிருந்தபோது, ஆர்தர் கொயெஸ்ட்லெர் என்பவரால் எழுதப்பட்ட, இரண்டு புத்தகங்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அவற்றை சிபாரிசு செய்து அவர் கூறியதாவது:

- உங்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட வழியில் நீங்கள்

விஷயங்களை பார்க்கிறீர்கள். எண்ணங்களைக் கடந்து செல்ல, பல விஷயங்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்- விஞ்ஞானம், கலை, இன்னும் பல. அவை அனைத்தும் தெரிந்திருக்க வேண்டியதில்லை. ஆனால், அதன் இடத்தை அங்கீகரிக்க வேண்டும்.

- துன்பங்கள் மனிதனிடமிருந்து மிகச் சிறப்பானவற்றை வெளிக்கொணரும். ஏனென்றால் துயரங்கள் அப்படிச் செய்கின்றன. நகைச்சுவை அதற்கு நேர் எதிரானவற்றைச் செய்கிறது- மனிதனின் மோசமானவற்றை அவை வெளிக்கொணருகின்றன.

- எதுவுமே தன்னிடத்தில் எந்த நன்மையையும் கொண்டிராத அளவுக்கு மிகவுமே மோசமானது அல்ல. ஒன்று இருந்தால் மற்றதும் இருக்கத் தான் வேண்டும்.

மார்ச் மாதம் 3ஆம் தேதி, சனிக்கிழமை அன்று, மாஸ்டர், பாஸ்டனிலிருந்து வந்திருந்த ஒரு இளைஞனை ப்ரிபெக்டுக்காக தயார் செய்து கொண்டிருந்தார். "நான் உன்னை ப்ரிபெக்டு ஆக்குவதற்கு முன்னால் உன்னை எச்சரிக்க விரும்புகிறேன். உன்னுடைய தன்னார்வத்தின் காரணமாக நீ சீர் தூக்கிப் பார்க்காமல் எல்லோரையும் சகஜ மார்க்கத்திற்குள் கொண்டு வந்து விடக் கூடாது. உதாரணமாக, ஒரு குடிகாரன் இருந்தான் என்றால், அவனுக்கு சிட்டிங் கொடுத்து நான் உதவி செய்கிறேன் என்று உன்னால் சொல்ல முடியாது. நீ இரக்க குணத்துடன் இருக்க வேண்டியதில்லை. அவர் தான் (பாபூஜி மகராஜின் புகைப்படத்தைக் காட்டி) இரக்க குணத்துடன் இருக்க வேண்டும்," என்று அவனிடம் கூறினார்.

## இரானியன் செமினார்

மார்ச் மாதம் 5ஆம் தேதி, திங்களன்று, இரானியன் செமினார் துவங்கியது. மாஸ்டர் 6ஆம் தேதி Dorm A யில் சத்சங்கம் நிகழ்த்தினார். சிட்டிங்கிற்குப் பிறகு, உடல் நலமில்லாததால், தன்னால் உரையாற்ற இயலாது என்று மாஸ்டர் கூறினார். அதன் பின்னர் ஒரு சில இரானியன் அப்யாசிகள் மாஸ்டருக்கு பரிசுப் பொருட்கள் வழங்கத் துவங்கியதும், மாஸ்டர் நெகிழ்ந்து போனார். மாஸ்டர் தன்னுடைய திட்டத்தை உடனே மாற்றிக் கொண்டு தன்னுடைய உரையை நிகழ்த்தப் போகின்றார் என்பதை, எல்லோராலும் உணர்ந்து கொள்ள முடிந்தது. அநேகம் பேர், கண்களில் நீர் மல்கும் அளவிற்கு நெகிழ்ந்து போனார்கள். மாஸ்டரின் குரலும் கூட மிகவும் மென்மையானதாக இருந்தது. ஏதோ ஒன்று சிறப்பாக செலுத்தப்படுவது (Transmit) புரிந்தது. மாஸ்டர், " நான் உங்களுக்கு உரை நிகழ்த்துவதாக இல்லை. ஏனென்றால், எனக்கு உடல் நலம் சரியில்லை. ஆனால் உங்களது ஆழமான அன்பு என்னைப் பேச வைத்து விட்டது." என்று சொன்னார். பெரும்பாலும் அறையில் இருந்த அனைவருமே அழுதனர். மாஸ்டர், " யாராவது அழும் பொழுது அவர்களது இதயம் மிகவும் மிருதுவாக ஆகிறது. அந்த நிலைமையில் மற்றவர் அவரிடம் சென்று, ஆறுதல் சொல்வதோ, அழாதே என்று சொல்வதோ கூடாது என்றார்." சகஜ மார்க்கத்தின் பரிபூரணமான பயிற்சி முறையின் விளைவால், இதயங்கள் மென்மையானவைகளாக ஆக வேண்டும். ஆரம்ப காலங்களில் அவை கண்ணீரை வரவழைக்கும். அதன் பிறகு, கண்ணீர் இல்லாமல் இந்த மென்மையாதல் தொடர வேண்டும். இதயம் மென்மையாவது ஒருபொழுதும் நின்று விடக்கூடாது என்று மாஸ்டர் கூறினார். இந்த நிகழ்ச்சி முடிந்ததும், மாஸ்டர் காயத்ரி சென்றார். வெள்ளிக்கிழமை, மார்ச் மாதம் 9ஆம் தேதி, மாஸ்டர் எல்லா இரானியன் அப்யாசிகளையும் இரவு நேர விருந்துக்காக, காயத்ரிக்கு அழைத்தார்.

மார்ச் 10ஆம் தேதி சனிக்கிழமை, காலை சுமார் 8.45 மணிக்கு, மாஸ்டர் ஆசிரமம் வந்தார். Dorm A யில், இரானியர்களுக்கான சத்சங்கத்திற்குப் பிறகு, மாஸ்டர், "உண்மையில் நான் பேசுவதற்குத் தான் திட்டமிட்டிருந்தேன். ஆனால், இந்த இரானியப் பெண்மணி தியானத்தை தொடங்க விரும்பினாள். ஆகவே நான் எல்லோருக்கும் சிட்டிங் கொடுத்தேன். நாம் எப்படி திட்டமிடுகிறோம், ஆனால் அது எப்படி மாறுகிறது என்பதைப் பார்த்தீர்களா. நாம் மேற்கத்தியர்களைப் போல மிகவும் அதிகமாகத் திட்டமிடக் கூடாது. ஆனால் ஓட்டத்தோடே கூட ஓடுவதற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும்" என்று சொன்னார். அவர் அதற்குப் பிறகு, நதியைப் பற்றியும், அது எப்படி தன் பாதையை அமைத்துக் கொண்டு தன் வழியே ஓடுகிறது என்பதைப் பற்றியும் பேசினார். நம் வாழ்க்கையும் அதே போல இருக்க வேண்டும். நாம் மிக உயர்ந்த லட்சியங்களான அன்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் ஆரம்பிக்க வேண்டும். அதன் பிறகு, அவை தாழ் மட்டத்தை நோக்கிச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும். எந்தவொரு லட்சியத்தையும் விட்டுக்கொடுக்காது, ஒவ்வொருவரையும் சென்று அடைய வேண்டும்.

அன்று மாலையில் மாஸ்டர், கேரளாவின் மண்டல(Zonal) ஆசிரமத்தின் ஒரு வீடியோவைப் பார்த்தார். "அந்த தருணத்திலேயே ஆசிரமம் துவக்கப்பட்டு விட்டது என்றும், அப்யாசிகள் அதைப் பயன்படுத்த ஆரம்பிக்கலாம் என்றும் கூறினார்.

## விடுதலையைப் பற்றி

மார்ச் 11 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று, காலை சத்சங்கத்திற்குப் பிறகு, தனது படுக்கையறையில் மாஸ்டர், குழந்தைகளுக்கு எவ்வாறு ஒவ்வொரு அனுபவமும் புதியதாகவும், ஆச்சரியத்தைக் கொடுப்பதாகவும் இருக்கின்றன என்று சொன்னார். "அநேக வருடங்களை வீணாக்கிய பிறகு, நான் நானாக இருக்க கற்றுக்கொண்டிருக்கிறேன்". மேலும் அவர், "இல்லை, நான் வேடிக்கையாகப் பேசவில்லை. ஆன்மீகம் என்னை நானாக இருக்க கற்றுக் கொடுத்திருக்கிறது. நான் நானாக மாறவில்லையென்றால் நான் முன்னேற முடியாது என்பதை, ஆன்மீகம் எனக்கு கற்றுக் கொடுத்திருக்கிறது. பிறகு, உரையாடல், விடுதலையைப் பற்றியதாக மாறியது. தான் அப்யாசிகளிடமிருந்தும், மிஷனிலிருந்தும், தனக்கு வாரிசாக வருபவரிடமிருந்தும், தன்னை எவ்வாறு விடுவித்துக் கொண்டிருக்கிறார் என்பதைப் பற்றியும் பேசினார். அவர், "நான் தான் என் அப்யாசிகளுக்குப் பொறுப்பு என்று நினைத்தேன். அதனால் தான் நான், உருவகப்படுத்திப் பேசுவதானால், அப்யாசிகளுக்ககாக என்னையே 'கொன்று கொண்டு இருந்தேன். ஆனால் ஒரு நிலையில், நான் எனது மாஸ்டருக்கு, என்னுடைய வேலையின் மூலமாக, என்னவாக மாற முடியும் என்பதைக் காண்பிக்க வேண்டியதே என் பொறுப்பு என்பதையும், என்னால் எதை உருவாக்க முடியும் என்பதையல்ல என்றும் உணர்ந்தேன். அது என்னை அப்யாசிகளிடமிருந்து விடுவித்தது. அதன் பிறகு, எனக்கு அடுத்து யாரை நியமிப்பது என்ற பிரச்சனை வந்தது. எனக்குப் பிறகு என்ன நேரிடுமோ என்று நான் கவலைப்படுவது உண்டு. ஒரு நாள், அவ்வளவு தான் என்னால் முடிந்தது, நான் அவரிடம் ஒப்படைத்து விட்டேன். இனிமேல் அவர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும், அது அவரது பிரச்சனை என்று நான் கூறிக்கொண்டேன். அவ்வளவுதான், அந்த பிரச்சனையிலிருந்தும் நான் விடுதலையானேன்."என்று கூறினார்.

மார்ச் 17 ஆம் தேதி சனிக்கிழமை அன்று, காலை உணவிற்குப் பின் மாஸ்டர், சித்தூரிலிருந்து வந்திருந்த, 500 அப்யாசிகளைச் சந்திக்க Dorm A க்குச் சென்றார். ஞாயிற்றுக்கிழமை மார்ச் 18ஆம் தேதி, மாஸ்டர் சத்சங்கம் நிகழ்த்தினார். அதன் பிறகு, அவர், விழுப்புரத்திலிருந்து வந்திருந்த அப்யாசிகளைச் சந்தித்தார். அவர்கள் ஏழு ஏக்கர் நிலத்தை வாங்குவதற்கான திட்டத்தைச் சொன்னார்கள். அதில் ஒரு பகுதி ஆசிரமத்திற்கும், மீதி அப்யாசிகளின் காலனிக்காகவும் இருக்கும் என்றும் கூறினர். மாஸ்டர் "ஸ்டார் வார்ஸ்" என்ற படத்தைப் பார்த்தார். அதில் யோடாசின் வசனங்களுள் ஒன்றான, "அச்சம் இருண்ட பகுதிக்கு அழைத்துச் செல்கிறது. ஏனெனில், அச்சம் கோபத்திற்கும், கோபம் வெறுப்பிற்கும், வெறுப்பு துயரத்திற்கும், துயரம் இருண்ட பகுதிக்கும்

அழைத்துச் செல்கிறது," என்பது, தனக்குப் பிடித்திருந்ததாகச் சொன்னார். மாலையில், குஜராத்திலிருந்து வந்திருந்த அப்யாசிகளின் குழு ஒன்று, மாஸ்டரின் அறையில் குழுமியிருந்தது. மாஸ்டர் தனது மூச்சுப் பயிற்சியை தவிர்த்து விட்டு, அவர்களுக்கு சிட்டிங் கொடுக்க வந்தார். அவர் ஒவ்வொருவரையும் பொறுமையாகச் சந்தித்து, அவர்களின் வேண்டுதல்களுக்கு பதில் அளித்தார்.

மார்ச் 21ந் தேதி, புதன்கிழமை அன்று, மாந்தோப்பில் உள்ள ஒரு மாஞ்செடியை, ஒரு பக்கத்திலிருந்து, வேறு ஒரு





பக்கத்திற்கு மாற்ற மாஸ்டர் திட்டமிட்டார். அந்தச் செடிக்கு எந்தவிதமான சேதமும் ஏற்படாவண்ணம், முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என, மாஸ்டரே முன்னின்று ஊர்ஜிதம் செய்தார். மார்ச் 25ந் தேதியன்று, ஒமேகா பள்ளியிலிருந்து இந்த வருடம் தேர்ச்சிபெறவிருக்கும் 12ம் வகுப்பின் சுமார் நூறு மாணவர்களை, மாஸ்டர் சந்தித்தார். அவர்களுடன் உரையாடி, சிற்றுண்டி உண்டு, ஒரு புகைப்படமும் எடுத்துக் கொண்டார். அடுத்த நாள் மாஸ்டர், காயத்ரிக்குச் சென்று, அங்கு ஒரு வாரம் தங்கிவிட்டு, மீண்டும் சனிக்கிழமையன்று ஆசிரமத்திற்கு வந்தார்.



## ஒவ்வொரு சத்சங்கமும் ஒரு தனி அமர்வு போல் இருக்க வேண்டும்.

ஏப்ரல் 1, ~ஞாயிறன்று, மாஸ்டர், ஆழ்ந்த ஒரு சத்சங்கத்தை நடத்தினார். அவர் கூடத்தை விட்டுச் சென்று, கால்ஃப் வண்டியில் அமர்ந்து, நீண்ட இணைப்பை உடைய ஒரு ஒலிபெருக்கியைக் கொண்டுவரச் சொல்லி, "குழு சிட்டிங்குகள் கொடுக்கும் கலை" பற்றி சுருக்கமாக ஒரு உரையாற்றினார். காலையில் அவர் சிட்டிங் கொடுத்துக் கொண்டிருந்தபோது, சத்சங்கங்களை, ஒவ்வொரு அப்யாசியும் தனி அமர்வுபோல் உணரும் வண்ணம் வழங்க, பிரிசெப்டர்கள் கற்றுக் கொள்ளவேண்டும் என்று தான் நினைத்ததாகக் கூறினார். சகோ. கமலேஷ் பட்டேல் இதைச்செய்ய வேண்டும் என்றும், இனி வரும் ஞாயிறு சத்சங்கங்களை அவர் தான் நடத்துவார் என்றும் கூறினார். மேலும், "கண்டிப்பாக நான் இங்கே இருக்கிறேன். சில வேளைகளில் நான் சிட்டிங்குகளும் கொடுப்பேன். ஆனால் அவை ஞாயிற்றுக் கிழமைகளில் இல்லாமலும் இருக்கலாம், அது வார தினமாகக் கூட இருக்கலாம். எனவே தயாராக இருங்கள்!" என்றும் மாஸ்டர் கூறினார். அவர் இதைத் தூய தமிழில் திரும்பவும் கூறிவிட்டுச் சென்றார்.

ஒரு முறைசாரா உரையாடலின் போது, தியானம் செய்யும் ஒருவரின் அக அழகானது எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப்பற்றி ஒரு சகோதரி குறிப்பிட்டார். ஒருவர் தியானம் செய்யும்போது, தியானம் செய்பவர் மேலும் அழகாக ஆவது இல்லை என்றும், அவர்களின் உள்ளே இருக்கும் தெய்வீகமானது வெளிப்பட்டு ஒளிர்கிறது என்றும் மாஸ்டர் அதைத் தெளிவாக்கினார். ஒரே ஒரு சிட்டிங்கிற்குப் பிறகு, ஒருவர் முழுவதுமாக மாற்றமடைந்து காணப்படும்போது, அத்தகைய வெளிப்படையான மாற்றத்தைக் கண்டிருப்பதாக அவர் கூறினார்.

## "நினைவு கூர்தல் மாஸ்டரைக் கவர்கிறது"

கான்பூரிலிருந்து வந்த சுமார் 650 அப்யாசிகளுக்கான ஒருவார கருத்தரங்கு, ஏப்ரல் 2ம் தேதி, திங்களன்று துவங்கியது. மாஸ்டர் Dorm A க்குச்சென்று, சத்சங்கம் நடத்தினார். சில இரானியன் அப்யாசிகளும் மாஸ்டரைச் சந்தித்தனர். ஒரு அப்யாசி " நாங்கள் இங்கிருந்து சென்றவுடன், மாஸ்டரின் கவனம் எங்கள் மீது தொடர்ந்து இருக்கும்படி செய்வது எப்படி?" என்று கேட்டார். "ஒரு ரோஜாப் பூ எப்படி கவர்கிறது- அதன் அழகாலும், மணத்தாலும்; ஒரு குழந்தை அன்னையை எப்படி கவர்கிறது- அன்பால்; ஒரு அப்யாசி மாஸ்டரை எவ்வாறு ஈர்க்கிறார்- அவன்/ அவளின் ஆன்மீக நிலையினால்," என்று மாஸ்டர் பதில் அளித்தார். மாஸ்டர், "மாஸ்டரை நம்முடன் வைத்துக் கொள்ளும் அளவிற்கு, நம் ஆன்மீக நிலை இருக்க வேண்டும். ஒழுங்காக தியானம் செய்வதும், நினைவு கூர்தல், தியானத்தைவிட மேலானது என்பதை அறிந்துகொண்டு, நிலையான நினைவைப் பயிற்சி செய்வதும் தான் அதற்கான வழியாகும்," என்று கூறினார். அதன் பின் அந்த அப்யாசி, "நிலையான நினைவுக்கு அப்பால் உள்ள அடுத்த நிலை என்ன?" என்று கேட்டார். "நீங்கள் அந்த நிலைக்கு வந்தவுடன் நான் உங்களுக்கு சொல்கிறேன்," என மாஸ்டர் பதிலளித்தார்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், ஒரு அப்யாசி சகோதரி, இசை அவளது தொழில் என்றும், ஆனால் இப்பொழுதெல்லாம், மாஸ்டர் அவள் இதயத்தை ஆட்கொண்டு விடுவதால், அவளால் இதய பூர்வமாக வாசிக்க முடியவில்லை என்றும் கூறினர். தனது தொழிலை மாற்றிக் கொள்ள வேண்டுமா என அவர் கேட்டார். அதற்கு மாஸ்டர், "அது அவசியமில்லை, அதற்குப் பதிலாக, எப்பொழுதெல்லாம் நீங்கள் வாசிக்கிறீர்களோ அப்பொழுது, மாஸ்டர் தான் உங்களுக்குள் புல்லாங்குழலை வாசிப்பதாக நினைத்துக்கொண்டு உங்கள் இசைக் கருவியை வாசியுங்கள்" என்று சொன்னார்.

ஏப்ரல் 6, வெள்ளிக்கிழமையன்று, சகோ. கிருஷ்ணா ஆற்றிய உரையை, மாஸ்டர் தன் அறையில் இருந்தே,CCTV மூலம் கேட்டார். உரைக்குப் பின், மாஸ்டர் Dorm A க்குச் சென்று, ஒரு சிட்டிங் கொடுக்க முடிவு செய்தார். அதன் பின்னர் அவர், தனது பணி முடியவில்லை என்றும், அடுத்த நாளும் ஒரு சிட்டிங் கொடுக்க தான் விரும்புவதாகவும், மையப் பொறுப்பாளருக்கு சுட்டிக் காட்டினார். ஏப்ரல் 7ம் தேதி, மாஸ்டர் ஹிந்தியில் உரையாற்றி, அதன் பின் ஒரு சிட்டிங் வழங்கினார். அவர் கான்பூர் சென்றிருந்தால், அவர்களை ஒரு நாளோ அல்லது

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்




இரண்டு நாட்களோ தான் சந்தித்திருந்திருக்க முடியும் என்றும், ஆனால் அவர்கள் வந்துவிட்டதால், ஒரு முழு வாரத்திற்கும் சந்திக்க முடிகிறது என்றும் கூறினார். அந்த ஒரு வாரத்தில், பல அப்யாசிகள் முழுமையான மாற்றத்தை உணர்ந்தனர். முதல் சிட்டிங்கிலிருந்து, கடைசி சிட்டிங் வரை ஏற்பட்ட மாற்றத்தை அவர்களால் காண முடிந்தது.

ஏப்ரல் 8-ம் தேதி ஞாயிறு அன்று, மாஸ்டரின் அறிவிப்புக்கு பிறகு, சகோ. கமலேஷ் பட்டேல் அவர்கள், முதன்முறையாக சத்சங்கம் நடத்தினார். அன்று மாலை மாஸ்டர், அப்போது வந்த சில அப்யாசிகளுடன் கலந்துரையாடினார். மேலும், எல்லோருக்கும் சிட்டிங் கொடுப்பதென அவர் முடிவு செய்தார். சகஜ மார்க்கத்தைத் தொடங்க விருப்பம் கொண்ட, 17-18 வயதுள்ள 6 அப்யாசிகள், மாஸ்டரின் அனுமதியுடன் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர்.

## மாஸ்டரிடமான உணர்திறனை வளர்த்துக்கொள்ளுதல்

சமீபகாலங்களில், நாம் கவனித்தோமானால், அப்யாசிகள் மாஸ்டருடைய ஸ்தூல ப்ரசன்னம் இல்லாமல், அவருடைய ஆன்மிக பிரசன்னதை உணரவேண்டும் என்பது மாஸ்டருடைய கவலையாக இருக்கிறது. மற்றும் இதை சமநிலைப்படுத்துவதற்காக, அவருடைய உடல்நிலை அனுமதித்த வரையில், அப்யாசிகளை நேரடியாக சந்தித்து, அவரைச் சந்திக்கவேண்டும் என்ற அவர்களுடைய ஏக்கங்களைப் பூர்த்தி செய்கிறார். நியமிக்கப்பட்ட தன்னார்வ தொண்டர்கள், தனிப்பட்ட அப்யாசிகள் மற்றும் குழு அப்யாசிகளின் விருப்பங்களை, மாஸ்டரிடம் எடுத்து சென்று நல்ல முறையில் பணியாற்றுகிறார்கள். மேலும், மாஸ்டருடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்கிறார்கள். உண்மையான தேவை இருக்கும் போது, இத்தகைய சந்திப்புகள் நிகழ்கின்றன. மற்ற வகையில், அப்யாசிகள் மாஸ்டரின் ஆரோக்கியத்திற்கு தொந்தரவு செய்யாமலிருப்பதையே மாஸ்டர் விரும்புகிறார். அவர் மீதான நம் அன்பு, நாம் அன்பு செலுத்தும் அவருக்கு, துன்பத்தை ஏற்படுத்தாத வகையில் இருக்க வேண்டும்.



## பூஜ்ய பாபூஜி மகராஜின் பிறந்த நாள் விழாக் கொண்டாட்டங்கள்

பூஜ்ய பாபூஜி மகராஜின் பிறந்த நாள் விழா, இந்தியா முழுவதும் உள்ள அனைத்து மையங்களிலும், மரியாதையுடனும், உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும், பக்தியுடனும் கொண்டாடப்பட்டது. மாஸ்டரின் அறிவுரையின்படி, எல்லா ஆசிரமங்களிலும், மையங்களிலும், இவ்விழாக்கள் நடத்தப்பட்டன. இந்த சுபமான நிகழ்ச்சியில் பங்கேற்க, அப்யாசிகள் மிகுந்த எதிர்பார்ப்புடன் கூடிய உணர்வுடனும், ஆவலுடனும் ஒன்று கூடினர். பல்வேறு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டன. விழாக்கள் சிறப்பான முறையில் நடப்பதை உறுதி செய்ய, அநேக அப்யாசிகள், திட்டமிடுவதற்கும், அவற்றை நிறைவேற்றுவதற்கும், அதிக அளவில் முயற்சிகள் எடுத்துக்கொண்டனர்.

சென்னையில், இவ்விழாவின் போது, மாஸ்டர் சத்சங்கம் நடத்தி, அதன் பின் உரையாற்றினார். சிறந்த மகான்களை, நினைவு கூற, நாம் கொண்டாடும் இத்தகைய விழாக்களின் அவசியத்தைப் பற்றிக் கூறினார். நினைவு கூர்தல், நம்மை இறந்த காலத்திற்கு இட்டுச் செல்லக்கூடாது என்றும், ஆனால், அவர்கள் நிகழ் காலத்தில் நம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பதைப் போல நினைவு கொள்ளல் வேண்டும் என்று அவர் கூறினார். பாபூஜியைப் பற்றிக் குறிப்பிட்டு, அவரது வாழ்க்கையையும், அவர் வாழ்ந்த விதத்தையும், அவரது எளிமையையும் கூட நாம் நினைவு கூற வேண்டும் என்று கூறினார்.

"விஸ்பர்ஸ் ~கூப்ரம் த ப்ரைட்டர் வேர்ல்ட்" புத்தகத்தின் நான்காவது பாகத்தை, மாஸ்டர் வெளியிட்டார். அந்த புத்தகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வாசிக்கப்பட்ட செய்திகளைக் கொண்ட, "விஸ்பர்ஸ்" என்று பெயரிடப்பட்ட, MP3 குறுந்தகட்டிலிருந்து, சில செய்திகள் இயக்கப்பட்டன.

பல மையங்களிலும் நடைபெற்ற கூட்டங்களின் உணர்வை நீங்கள் பெற, ஒரு புகைப்படத் தொகுதியை நாங்கள் வழங்குகிறோம்.


பில்வாரா


அலுவா


அஜ்மீர்


அலிகர்


ஜோத்பூர்

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்


டேராடூன்


தாவண்கெரே


கோலார்


ஸ்ரீ கங்காநகர்


பிகானீர்


மதுரை


பெங்களூரு


காசிபூர்


ராம்பூர்


சித்திபேட்


ராஞ்சி


கோரக்பூர்



மிர்சாபூர்


உதய்பூர்


கான்பூர்


வாரணாசி


பய்யனூர்


நொய்டா

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## சகோதரத்துவத்தை வலிமைப்படுத்துவதற்காக யாத்திரை



## வாரணாசி, உத்திர பிரதேசம்

உத்திர பிரதேச மாநிலத்தில், சொன்பத்ரா மாவட்டத்தைச் சேர்ந்த வாரணாசி, விந்திய மலைச் சாரலில் உள்ளது. மார்ச் 23 அன்று, வாரணாசி மையத்திலிருந்து, 30அப்யாசிகள், மாஸ்டரின் செய்திகளின் மூலம், புறநகர் பகுதி அப்யாசிகளுக்குள் அன்பு, மற்றும் சகோதரத்துவத்தை, வளர்க்கவும், வலுப்படுத்தவும், ஒரு பேருந்தில் புறப்பட்டனர். இக்குழுவை, சகோ. ரவி ஜெயின், சகோ.R.K.மால்வியா ஆகிய பிரிபெக்ட்கள் வரவேற்றனர். அதல்ஹாத், ராபர்ட்ஸ்கன்ஜ், ரேணுகூத், சக்திநகர் மற்றும் தூதி மையங்களுக்கு சென்ற போது, உள்ளூர் மற்றும் அருகிலிருந்த மையங்களின் அப்யாசிகளால் வரவேற்கப்பட்டனர். அதல்ஹாத் மற்றும் ரிஹன்ந் நகரில் இல்லக் கூட்டமும், ராபர்ட்ஸ்கன்ஜ், சக்திநகர் மற்றும் தூதியில் சத்சங்கங்களும் நடத்தப்பட்டன. இரண்டு நாள் பயணத்தின் போது, மாஸ்டரும் தங்களுடன் பயணம் செய்ததாக அனைத்து அப்யாசிகளும் உணர்ந்தார்கள். அவருடைய பிரசன்னமும், அன்பும் அனைத்து அப்யாசிகளின் இதயங்களிலும் உறுதியுடன் ஒலித்தன. பல்வேறு மையங்களின் அப்யாசிகள் காட்டிய அன்பும், நேசமும், பிரம்மிப்பாகவும், மறக்க முடியாததாகவும் இருந்தது.

## அகமதாபாத், குஜராத்

பிப்ரவரி 25 , 26 ஆகிய தினங்களுக்கு, அகமதாபாத் ஆசிரமம், 'இளமைப் பருவம் - முன்னேற மற்றும் முயற்சிக்கு உகந்த காலம்' என்னும் கருப்பொருளைக் கொண்டிருந்தது. பங்கேற்பாளர்கள், சிறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, அவர்களுக்கு ஆசிரமத்தில் பணிகள் கொடுக்கப்பட்டன. அதன்பின் இருந்த, திறந்தவெளி விளையாட்டின்போது, ஜெயிக்க வேண்டும் என்றில்லாமல், மகிழ்ச்சிக்காக விளையாடுகிறோம் என்ற எண்ணம் அனைவரிடத்திலும் உணரப்பட்டது. பூனே மைய பங்கேற்பாளர்கள் வழங்கிய ஒரு வீடியோ படத்தொகுப்பில், இளைஞர்கள் தாங்களே ஈடுபடுத்திக் கொள்ளக்கூடிய, மிஷனின் பல்வேறு செயல்பாடுகளைப் பற்றிய விளக்கங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. ஞாயிற்றுக் கிழமை சத்சங்கத்திற்கு பின், அவர்களுக்கு படிக்கவும், உள்ளார்ந்து ஈடுபடவும், மாஸ்டரின் செய்திகள் அளிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, வீடியோவில் துண்டு செய்திகள் காண்பிக்கப்பட்டு, அதிலுள்ள ஆன்மீக அர்த்தத்தை கண்டறியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். சூரத் மைய அப்யாசிகள், லாலாஜி வாழ்க்கையை சித்தரிக்கும் குறுநாடகத்தை நிகழ்த்தினர். சகஜ மார்க்கத்தின் பிரதிநிதியாக, அதைப் பற்றிப் பொதுமக்களிடம் எவ்வாறு பேசுவது என்பதைப் பற்றிய பயனுள்ள குறிப்புகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிக்கு பின், இளைஞர்களுக்குள் மிகச் சிறந்த இணைப்பு, ஏற்பட்டிருந்ததை உணர முடிந்தது.

## பில்வாரா, ராஜஸ்தான்

பிப்ரவரி 26 ம் தேதி, 'அன்பு' என்ற தலைப்பிலான இளைஞர் நிகழ்ச்சியில், ஏழு அப்யாசிகள் கலந்து கொண்டனர். அவர்கள் தங்களுடைய கருத்தை தெரிவித்ததுடன், மிஷன் புத்தகங்களிலிருந்து எடுத்த சில பகுதிகளிலும் கலந்துரையாடினார்கள். மார்ச் 25 அன்று, சத்சங்கத்திற்கு பின், சுமார் ஒன்பது அப்யாசிகள், சகஜ மார்க்கத்திலுள்ள இளைஞர்களுக்கு எவ்வாறு விழிப்புணர்வை ஏற்படுத்துவது, மற்றும் மிஷனின் செயல்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தும் வழிகள் ஆகியவை பற்றி விவாதித்தார்கள். அனைத்து வாரமும், சத்சங்கத்திற்கு பின் குறுநாடகம் நடத்தவும், நமது பிணைப்பை வலுப்படுத்த, கோடை விடுமுறையில் சிற்றுலா செல்வதற்கும் கருத்துகள் பெறப்பட்டன.


# புதிய வெளியீடுகள்









'அன்பும், மரணமும்' என்ற தமிழாக்கத்தின் மறுபதிப்பு




ஹார்ட் ஸ்பீக் 2011
ஆங்கிலம்




ஹார்ட் ஸ்பீக் 2010
DVD




பாபூஜி இன் ஷாஜஹான்பூர்
1971-1975
MP3

### ஹார்ட் ஸ்பீக் 2009

2009ல், இந்தியாவில் மாஸ்டர் ஆற்றிய உரைகள் மற்றும் கலந்துரையாடல்களைக் கொண்ட, இதய வாக்கு வரிசையின் சமீபத்திய சேர்க்கை




விஸ்பர்ஸ்
(தேர்ந்தெடுக்கப்பட்ட செய்திகள்)
MP3




ஹார்ட் ஸ்பீக் 2008
MP3

# ஆசிரம மேம்பாட்டுச் செயல்கள்





## ஜெய்பூர், ஆந்திரபிரதேசம்

மார்ச் மாதம் 25ம்தேதி, ஞாயிற்றுகிழமை அன்று, அடிலாபாத் மாவட்டம், ஜெய்பூரில் அமையப்பெற்ற தியான மண்டபத்தை, சென்னையிலிருந்தபடியே மாஸ்டர் திறந்து வைத்தார். பத்து ஏக்கர் ஆசிரம இடத்தின் படத்தொகுப்பை அவர் பார்வையிட்டார். ஆசிரமத்தைத் திறந்து வைத்ததாக அவர் அறிவித்த பிறகு, 200 க்கும் மேற்பட்ட அப்யாசிகள், அமைதியாக தியான மண்டபத்திற்குள் நுழைந்து சத்சங்கத்திற்காக அமர்ந்தனர். இக்கூடம், 1500 அப்யாசிகள் அமரும் வகையில் இடவசதி கொண்டது. இதனால், கோதாவரிகானி, மஞ்செரியல், ஸ்ரீராம்பூர், மண்டமாரி, பெல்லம்பள்ளி, மற்றும் கொலெடி உட்பட்ட, நிலக்கரி சூழ் பகுதியை சேர்ந்த நிறைய மையங்கள், தற்போது மிஷனுக்கு சொந்தமான ஆசிரமம் ஒன்றைப் பெறுவர்.

## பர்கூர், தமிழ்நாடு

சகோ.S.பிரகாஷ் (மண்டலப் பொறுப்பாளர், வடக்கு தமிழ் நாடு) அவர்கள், தமிழ்நாட்டில், கிருஷ்ணகிரிக்கு அருகில் பர்கூரில் அமையப்பெற்ற தியான மண்டபத்தை, ஏறத்தாழ ஐம்பது அப்யாசிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில், திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து சத்சங்கமும், அப்யாசிகளின் தரம் மற்றும் எண்ணிக்கையில் முன்னேற்றம் பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றது.

## சிக்லி, மஹராஷ்டிரா

சிக்லியில், 2005 ம் ஆண்டு நிலம் வாங்கப்பட்டது. அதற்கு அடுத்தடுத்த வருடங்களில், தியான மண்டபம், மாஸ்டர் தங்குமிடம் மற்றும் சமையல் அறை ஆகியவை கட்டப்பட்டு, அதைத் திறந்து வைக்க, மாஸ்டரின் வருகையை எதிர்பார்த்திருந்தனர். மாஸ்டரின் பயணங்கள் குறைக்கப்பட்டதால், பன்னிரெண்டு அப்யாசிகள் கொண்ட குழு ஒன்று, ஆசிரமத்தின் படத்தொகுப்புடன் மாஸ்டரை சந்திக்க சென்றனர். பிப்ரவரி 27 அன்று, மாஸ்டர் ஆசிரமத்தை திறந்து வைத்ததாக அறிவித்தார். அனைவரும் வியக்கும்படியாக, பிப்ரவரி 29 அன்று மாலை, சிக்லி ஆசிரமத்துடன், வீடியோ மாநாடு மூலமாக தொடர்பு கொண்டார். அவர் அப்யாசிகளிடம் உள்ளூர் மொழியிலேயே உரையாற்றினார். மேலும், சகோ. நிவ்ரிட்டியை சத்சங்கத்தை தொடங்குமாறு கேட்டுக் கொண்டார். சிக்லி மற்றும் அதன் அருகில் உள்ள மையங்களான புல்தானா, காம்காவ், கின்ஹோலா மற்றும் டியுல்காவ் கூபேயைச் சேர்ந்த சுமார் 100 அப்யாசிகள் அங்கு இருந்தனர்.

## டாமன்:

அக்டோபர் 2008 வரை, டாமனை சேர்ந்த அப்யாசிகள், ஞாயிற்றுகிழமை சத்சங்கத்திற்காக வாபி மையத்திற்கு வருவது வழக்கமாக இருந்து வந்தது. 2008 நவம்பரில், மாஸ்டர் சகோ.ஷைலேந்திரா அவர்களை பிரிபெக்ட்டாக நியமித்தார். மற்றும், சகோ.பாண்டே அவர்களின் இல்லத்தில், சுமார் 20 அப்யாசிகளுக்காக சத்சங்கங்கள் நடத்தப்பட்டன. அப்யாசிகளின் எண்ணிக்கை 35 ஆக அதிகரித்த பிறகு, முதல் தளத்தில் தியான மண்டபம் ஒன்றை கட்ட, சகோ.பாண்டே முன்வந்தார். மார்ச் 2012ல், 1600 சதுர அடியில் அமைந்த கூடத்தின் கட்டிட வேலை முடிவடைந்தது. அப்யாசிகள் மின்விசிறி, நாற்காலி, மேஜை மற்றும் ஒரு புத்தக அலமாரி ஆகியவற்றை நன்கொடையாக வழங்கினர்.

ஏப்ரல் 1 அன்று, சூரத் மைய பொறுப்பாளர், குஜராத் மண்டல பொறுப்பாளர் மற்றும் அருகாமையில் இருக்கும் மையங்களைச் சேர்ந்த அப்யாசிகள் முதலானோர் ஒன்று கூடி, புதிய தியான மண்டபத்தைத் திறந்து வைத்தனர். 91 அப்யாசிகள், மற்றும் 21 குழந்தைகள் அந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர். சகோ.அனில், மற்றும் மண்டல பொறுப்பாளர்கள் சகோ.ராஜுபாய் மற்றும் சகோ. சுரேந்திரா அவர்களின் உரைகள் இடம்பெற்றன. அருகில் உள்ள மையங்களைச் சேர்ந்த அப்யாசிகள், அவர்களின் மைய வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகளை பற்றி பகிர்ந்து கொண்டனர். அந்நிகழ்ச்சியில், ஒழுக்கநெறிகள் பற்றிய குறுநாடகம் ஒன்றும், அப்யாசிகள், அவர்களின் குழந்தைகள் ஆகியோரின் பஜனைகளும் இருந்தன.

## விழுப்புரம், தமிழ்நாடு

விழுப்புரம் ஆசிரமத்தின் நிலப்பத்திரத்தை, மாஸ்டரிடம் வழங்குவதற்காக, அப்யாசிகளின் குழு ஒன்று மணப்பாக்கத்திற்கு வருகை புரிந்தது. 9 பேர் கொண்ட குழு மட்டுமே மாஸ்டரை சந்திப்பதாகத் திட்டமிட்டிருந்தனர். இருப்பினும், ஆர்வமிக்க மற்ற அப்யாசிகள், எதிர்பார்ப்புடன் காத்திருந்ததோடு மட்டுமல்லாமல், இதயம் நிறைந்த அன்போடு இருந்தமையால், மாஸ்டரை சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். மாஸ்டர், விழுப்புரத்திற்கு வருகை புரிவதாக உறுதி அளித்தார். மேலும் அவர் அங்கே ஓர் இரவு தங்க இயலுமா என்றும் வினவினார். அவர், குழந்தைகளுடனும் கலந்து உரையாடினார். அப்யாசிகளிடம், ஆசிரம கட்டிட பணிகளை மேற்கொள்ளுமாறு கூறினார். மாஸ்டரை சந்தித்த பிறகு, அப்யாசிகள் பூரிப்படைந்ததோடு மட்டுமல்லாமல், மாஸ்டரின் ஆசி கிடைத்ததாகவும் உணர்ந்தனர்.





# எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## மண்டல ஆசிரமம், பெங்களூர்



பெங்களூரில் உள்ள மண்டல ஆசிரமத்தில், ஒரு புதிய தியானக் கூடம் கட்டப்பட்டுள்ளது. இந்த தியானக் கூடமானது, இக்காலத்தின் மிக உயரிய குருவாகிய, பரமபூஜ்ய பாபூஜி மகராஜ் அவர்களுக்கு, மாஸ்டரால், 2012 பிப்ரவரி 19 அன்று, சமர்ப்பணம் செய்யப்பட்டது. தியானக் கூடமானது, 80 அடிக்கு 120 அடி என்ற அளவில், 2000 அப்யாசிகள் அமரக் கூடிய வகையில் உள்ளது. அந்த இடத்தினுடைய தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற வகையில், சுற்றிலும் பசுமையான செடிகளைக் கொண்டு, ஒரு திறந்த அமைப்பிலான கூடமாக இது அமைக்கப்பட்டுள்ளது.

2012, பிப்ரவரி 26 அன்று, அன்றைய நாளுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில், ஒரு முழுநாள் நிகழ்ச்சியானது, காலை 9.00 மணி மற்றும் மாலை 4.00 மணி சத்சங்கங்களுடன் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், பெங்களூர் மற்றும் அதன் அருகில் உள்ள மையங்களில் இருந்து, 1353 அப்யாசிகளும் மற்றும் 125 குழந்தைகளும் கலந்து கொண்டனர். அன்றைய தினத்தில், "குருவும் இலட்சியமும்" என்ற தலைப்பில் சகோ.ஏ.பி.துரை, சகோ.பிரசன்னா, சகோ.நாகராஜா மற்றும் சகோ.வெங்கடாத்ரி ஆகியோர் உரையாற்றினர். அவர்களது ஈர்ப்பு மிகுந்த பேச்சானது, அப்யாசிகளுக்கு, சுய ஆய்வு செய்துகொள்வதற்கு ஒரு வழிகாட்டுதலாக அமைந்தது. மேலும் இந்த அனுபவம், அண்மையில் நியமிக்கப்பட்ட ஆசிரம பராமரிப்பு குழுவினருக்கு, செறிவூட்டுவதாகவும் மற்றும் அவற்றை வெளிக்காட்டுவதாகவும் இருந்தது.

## முழுநாள் நிகழ்ச்சிகள்

### பில்வாரா, ராஜஸ்தான்(4 மார்ச்2012)

பழைய, புதிய அப்யாசிகள் அனைவரும் ஒன்றாக இணைந்து, மிஷனில் சேர்ந்ததற்கான பல்வேறு காரணங்களான, மன அமைதி, வாழ்க்கையில் சந்திக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், சத்தியத்தைத் தேடுதல், மற்றும் கடவுளைத் தேடுதல் போன்றவற்றைப் பற்றிக் கலந்துரையாடினர். பிறகு அவர்கள், அன்றாட பயிற்சி முறையுடன் தொடர்புடைய பல்வேறு இடர்பாடுகளைப் பற்றியும், அப்யாசிகளுக்கிடையே ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு செயல்படுவதில் ஏற்படக்கூடிய சிக்கல்களைப் பற்றியும் கலந்துரையாடினர்.

பெரும்பாலானோர், இந்த சிக்கல்களைக் கடந்து வெற்றி கொள்வதற்கு, குருவானவர் எவ்வாறு உதவி புரிந்தார் என்றும், அதில் அவரது பிரசன்னத்தை தாங்கள் உணர்ந்த விதம் குறித்தும், கூறினர். நிபந்தனையற்ற அன்பும், குருவின் வழிகாட்டுதலும் அப்யாசிகள், அவர்களுடைய ஆன்மீகப் பாதையில் தொடர்ந்து முன்னேற ஒரு தூண்டுதலாக இருந்தது, என்பது அவற்றின் சாராம்சம் ஆகும். இந்நிகழ்ச்சியானது, அவர்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மட்டுமே உதவியாக இருந்தது என்றில்லாமல், அவர்கள், மாஸ்டர் மேல் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையை வலுப்படுத்தி, அதன் மூலம் அவர்களுடைய இறுதி குறிக்கோளை அடையவும் உதவிபுரியும் என்று நம்பப்பட்டது.

## விருதுநகர் ஆசிரமம், தமிழ்நாடு



மார்ச் 18 அன்று, விருதுநகர் மற்றும் அதனைச் சுற்றியிருக்கக்கூடிய துணை மையங்களிலிருந்து 52 அப்யாசிகள் ஒன்றாகக்கூடி, "சங்கல்ப சக்தியின் வலிமை" மற்றும் "இப்பொழுதே விழித்தெழுங்கள்" உள்ளிட்ட தலைப்புகளில் குழுவாகக் கலந்துரையாடினர். "குருவும் இலட்சியமும்" என்ற புத்தகத்திலிருந்து, மாஸ்டருடைய மேற்கோள்களை படித்தும், அதற்கு விளக்கங்கள் கூறியும் கலந்துரையாடப்பட்டது. மேலும் அவர்கள், சுத்தப்படுத்துதல் மற்றும் தோட்டவேலைகளிலும் ஈடுபட்டனர். இந்த முழுநாள் நிகழ்ச்சியானது, அன்புக்குரிய மாஸ்டரது நினைவில் இருப்பதற்கு ஓர் அற்புதமான வாய்ப்பாக இருந்ததை அப்யாசிகள் உணர்ந்தனர்.



## திரூர் ஆசிரமம், கேரளா (25 மார்ச் 2012)

திரூர் ஆசிரமமானது, அதன் மூன்று பக்கங்களிலும் பரந்து விரிந்த அரபிக் கடலால் சூழப்பட்டு, நதியின் இயற்கை எழில் கொஞ்சுகின்ற, அற்புதமான ஆசிரமம் ஆகும். திரூர் இரயில் நிலையத்திலிருந்து 14 கி.மீ. தொலைவில் இது அமைந்துள்ளது. இந்த ஆசிரமமானது, ஏப்ரல் 4, 2009 அன்று துவங்கப்பட்டது. அன்று முதல், இங்கு எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் முழுநாள் நிகழ்ச்சி கொண்டாடப்பட்டு வருகிறது.

மார்ச் 25 அன்று, ஆசிரமத்தில், ஒரு மிகப்பெரிய முழுநாள் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பொன்னணி, மஞ்சேரி, பெரிந்தல்மன்னா, பட்டாம்பி மற்றும் வாலன்சேரி ஆகிய, அருகிலுள்ள பல்வேறு மையங்களிலிருந்து, குழந்தைகள் உட்பட சுமார் 200 அப்யாசிகள், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். முழுநாள் நிகழ்ச்சியானது, காலை 7.30 மணிக்கு சத்சங்கத்துடன் துவங்கியது. நிகழ்ச்சியில், "மாஸ்டர், மிஷன், மற்றும் பயிற்சிமுறை" குறித்தும், "இல்லற வாழ்வில் சகஜ மார்க்கம்" குறித்தும் உரைகள் நிகழ்த்தப்பட்டன. இந்த உரைகள் அனைத்தும் மிகச்சிறந்த தகவல்களை உள்ளடக்கியதாக இருந்தது. பல அப்யாசிகள், இதனை தங்களுடைய குடும்ப வாழ்க்கையில் பின்பற்றி, அதனால் ஏற்படும் மாற்றத்தை அனுபவ ரீதியாக உணரவும், மனதில் உறுதி கொண்டனர். மதிய நேரத்தில், இளைஞர்களுக்கான கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்தில், ஒவ்வொரு மாதமும் பல்வேறு ஆசிரமங்களுக்கு சென்று, அங்கு கூட்டங்கள் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

குழந்தைகள் மையத்தில், அனைத்துக் குழந்தைகளும்,, அந்த இடத்திலேயே தயாரிக்கப்பட்ட குறு நாடகத்தில் பங்கேற்றனர். குழந்தைகளுக்கு, நன்னெறிக் கல்வியினை அடிப்படையாகக் கொண்ட கதைகள் கூறப்பட்டன. பிறகு, குழந்தைகள் அனைவரும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட கதைகளை, உடனுக்குடன், எவ்வித தயாரிப்புமின்றி ஒரு குறு நாடகமாக நடித்துக் காண்பிக்குமாறு கூறப்பட்டது. குழந்தைகள் அனைவரும் மிகுந்த பேரார்வத்துடன் பங்கேற்றனர். இந்த முழுநாள் நிகழ்வானது, மாலை சத்சங்கத்துடன் நிறைவு பெற்றது.

# பயிற்சி முகாம்களும் கூட்டங்களும்

## மும்பை அப்யாசிகளுக்கான கூட்டம்

சென்னை - பிப்ரவரி 26 முதல் 2012 மார்ச் 3 வரை



26பிப்ரவரி அன்று, மும்பையில் இருந்து வந்திருந்த சுமார் 500 அப்யாசிகள், தியானக்கூடத்தில், மாஸ்டர் சத்சங்கம் நடத்தி, திருமணங்கள் நடத்திவைத்ததைக் கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். சகோ.கமலேஷ் பட்டேல், மாஸ்டரின் ஸ்தூல பிரசன்னத்தை மட்டுமே காண்பதை விட, மாஸ்டரை பின்பற்றுவதில் இதயத்தினைப் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து பேசினார்.

"சகோதரத்துவம்" மற்றும் "இதயம் பேசுகிறது" ஆகிய தலைப்புகளின் கீழ், சொற்பொழிவுகளும் கருத்து பரிமாற்றங்களும், சகோ.ஆல்பெர்ட்டோ, மற்றும் சகோதரி லலிதா சீனிவாசன் ஆகியோரால் நடத்தபட்டது. சகோ.ராஜகோபால் "பயிற்சி செய்தல்" பற்றியும், சகோ.சோமகுமார் மிஷனில் சேவை செய்தல், நிலையான நினைவு மற்றும் சகோதரத்துவம் ஆகியவை குறித்தும் கேள்வி பதில் நிகழ்ச்சியினை நடத்தினர்.

29ம் தேதி மாலை, மாஸ்டர், 50 புதிய அப்யாசிகளை அவருடைய குடிலில் சந்தித்தார். மார்ச்1ம் தேதி, அனைத்து அப்யாசிகளுடனும் தன் நேரத்தினை செலவழித்தார். ஒரு அப்யாசியின் வாழ்க்கையில், நேரத்தினை நிர்வகிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தினைப் பற்றிப் பேசினார். பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து புரிந்துகொள்ள வேண்டும் எனவும், நேரம் கிடைக்கின்ற சமயங்களில் எல்லாம் தியானம் செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்திக் கூறினார்.

அப்யாசிகளால் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்தக்கூட்டம், பயிற்சியில் அதிக அர்ப்பணிப்புடன் இருக்கவும், மற்றும் அவர், நாம் என்னவாக மாற விரும்புகின்றாரோ அவ்வாறு மாறவும் ஒரு ஊக்கசக்தியினை அளித்ததுபோல் இருந்தது.

## பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சி

ஆர்.கே.புரம் ஆசிரமம், புது டெல்லி மார்ச் 23-25, 2012



பயிற்சியாளர்களுக்கான பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சி, ஆன்மீக பயிற்சி அளிக்கும் குழுவின் தலைவர், (Spiritual Training Delivery (SPD)Team) சகோ.சந்தோஷ் ஸ்ரீநிவாசனால் நடத்தப்பட்டது. பல பயிற்சி முகாம்கள் நடத்தியும், மிஷனுக்காக செயல்புரிபவர்களிடம் பல முறை கலந்துரையாடியும், SPD குழு, அப்யாசிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதைக் கண்டறிந்து, "பயிற்சியின் அடித்தளம்" (Grounding in the Practice) என்ற பயிற்சி முறையினை தயாரித்துள்ளது. பல்வேறு மண்டலங்களில் இருந்து, அவர்களது மையங்களின் அப்யாசிகளுக்கு பயிற்சி அளிப்பவர்களாக செயல் படப் போகும் பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், பயிற்சி முகாம் வடிவமைக்கப்பட்டு இருந்தது.

வட இந்தியாவில் உள்ள 9-12 மற்றும் 18 முதலிய மண்டலங்களில் இருந்து, மொத்தம் 63 பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டனர். அச்சமயத்தில், டெல்லியில் இருந்த சகோ.கமலேஷ் பட்டேல், 24ம் தேதி, பிரதிநிதிகளுக்கு உரை நிகழ்த்தினார். இதில் கலந்துகொண்ட பெரும்பாலான பிரதிநிதிகள், இந்த பயிற்சி முகாமினால் தாங்கள் மிகவும் பயன் அடைந்ததாகத் தெரிவித்தனர்.

## பிரிபெக்ட்களுக்கான கூட்டம்

வடுகப்பட்டி ஆசிரமம், தமிழ்நாடு



தமிழ்நாடு வடக்கு மண்டலத்தினைச் சேர்ந்த, 68 பிரிபெக்ட்களுக்கான இரண்டு நாள் கூட்டம், மார்ச் 16 மற்றும் 17ம் தேதிகளில், திருச்சி வடுகப்பட்டி ஆசிரமத்தில் நடத்தப்பட்டது. "அனைவருக்கும் ஆன்மீகம்" என்ற கருத்தினை மையமாகக் கொண்டு, மண்டல பொறுப்பாளர் சகோ.பிரகாஷ் இந்த நிகழ்ச்சியினை நடத்தினார்.

இந்த மண்டலத்தில் உள்ள, ஆன்மீகத்தில் ஆர்வம் கொண்ட ஒவ்வொருவரும், 2017ம் ஆண்டுக்குள், குறைந்தது ஒரு முறையாவது சகஜ மார்க்கத்தினைப் பற்றி கேள்விப்பட்டு இருக்க வேண்டும் என்பதுதான் இந்த நிகழ்ச்சியின் குறிக்கோளாக இருந்தது.

இந்த குறிக்கோளின் அடிப்படையில், கலந்துரையாடல்கள் மற்றும் சிந்திக்கும் திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்தப்பட்டன. பங்கு கொண்டவர்கள், குழுக்களாக பிரிக்கப்பட்டனர். இந்த குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு, ஒரு குறு நாடகத்தினை உருவாக்கி நடித்துக்காட்டும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த குறு நாடகங்கள் மகிழ்ச்சியினை அளிப்பனவாகவும், சிந்தனையினை தூண்டுகின்ற விதத்திலும் இருந்தன. நடைபெற்ற அனைத்தும், ஆலோசனைகளாகவும், செயல் திட்டங்களாகவும் தொகுக்கப்பட்டன.

இரண்டாம் நாள், தஞ்சாவூர் ஆசிரமத்திற்கு குழுவினர் சென்றனர். அங்கு சில பிரிபெக்ட்கள் சொற்பொழிவாற்றினர். பின்னர் சகோ.எஸ்.பிரகாஷ், லட்சியத்தினை முன் வைத்து குழுவாக பணி செய்யவேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்திக் கூறினார்.

## மிஷனின் இலக்கிய பயிற்சி முகாம்
### கர்நாடகா

மிஷனின் இலக்கியங்களைப் படிப்பதை ஊக்கப்படுத்தும் வகையில், பெங்களூரு மைய புத்தக வெளியீட்டு குழுவின் தன்னார்வ தொண்டர்களால் பயிற்சி முகாம் ஒன்று, ஷிமோகாவிலும், ஹுன்சூரிலும் நடத்தப்பட்டது.

ஷிமோகாவில், பிப்ரவரி 12-ம் தேதியன்று, ஷிமோகா, பத்ராவதி, ந்யம்தி மற்றும் மங்களூர் மையத்திலிருந்து வந்திருந்த 23 அப்யாசிகளுக்கு நடத்தப்பட்டது. மார்ச் 25-ம் தேதியன்று, ஹுன்சூர் மற்றும் பெரியபட்னாவிலிருந்து, சுமார் 30 அப்யாசிகள் வந்திருந்து, ஹுன்சூர் சாஸ்திரி பள்ளியின் அரங்கத்தில் ஒன்று கூடினர்.

இரண்டு இடங்களிலும், மிஷனின் ஒரு புத்தகத்தை படித்து, அதில் மாஸ்டரால் சொல்லப்பட்ட ஒரு கதையைத் தேர்ந்தெடுத்து வரவேண்டும் என அப்யாசிகளுக்கு முன்கூட்டியே தகவல் அளிக்கப்பட்டது. நம் பயிற்சியின் ஒரு பகுதியாக, கண்டிப்பாக நாம் அனைவரும், நம் மிஷன் இலக்கியங்களை கவனமாகவும், குறிப்பிட்ட நோக்கத்துடனும் படிக்க வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

அப்யாசிகள் அனைவரும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, அவர்கள் படித்து தேர்ந்தெடுத்த கதைகளை வாசித்து, அதில் உள்ள நன்னெறிகளைப் பற்றிக் கலந்துரையாடினர். அந்நெறிகளை நம்மால் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்த முடிகிறதா, அவ்வாறு இல்லையானால், அவற்றை தினசரி வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில் இருக்கக் கூடிய சவால்கள் என்னென்ன, அந்த சவால்களை எவ்வாறு கடந்து வருவது என்பது பற்றியும் கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து, மாஸ்டர் கதைகளைக் கூறும் வீடியோ பதிவுகள் ஒளிபரப்பப்பட்டன. அனைத்து அப்யாசிகளும் சுறுசுறுப்புடனும், உற்சாகத்துடனும் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பயனடைந்தனர். அங்கே மிஷன் புத்தகங்களை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## குழந்தைகளுக்கான விளையாட்டு நாள்
### பாபூஜி நினைவு ஆசிரமம், மணப்பாக்கம், சென்னை

ஏப்ரல் 1, 2012 அன்று பாபூஜி நினைவு ஆசிரமத்தில், குழந்தைகளுக்கான விளையாட்டு நாள் விழா நடைபெற்றது. பல்வேறு விதமான விளையாட்டு செயல்பாடுகளில், 160க்கும் மேற்பட்ட குழந்தைகள், 6-லிருந்து 8 வயது வரை, 8-லிருந்து 10 வயது வரை, 10-லிருந்து 12 வயது வரை என மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தனர். ஸ்பூனில் எலுமிச்சம் பழம் கொண்டு செல்லுதல், ஜோடி ஓட்டம், தவளை ஓட்டம், அதிர்ஷ்ட மூலை போன்ற பல்வேறு விதமான விளையாட்டுகள், விளையாட்டு மைதானத்தில், காலை 10 மணியிலிருந்து 1 மணி வரை நடைபெற்றன. குழந்தைகள் அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு மகிழ்ச்சியடைந்தனர். அந்த நிகழ்ச்சியானது குழந்தைகளும், தன்னார்வ தொண்டர்களும், செய்த பிரார்த்தனையுடன் தொடங்கியது. முடிவில் பரிசு வழங்கும் விழாவும் நடைபெற்றது.



## தன்னார்வ தொண்டர்களுக்கான பயிற்சி முகாம்
### வேலூர், தமிழ் நாடு



தன்னார்வ தொண்டர்களுக்கான பயிற்சி முகாம், பிப்ரவரி 25,26 தேதிகளில் வேலூர் மையத்தில் நடைபெற்றது. வேலூர் மையத்தி லிருந்து ஏறக்குறைய 40 அப்யாசிகள் பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியானது, தன்னார்வத் தொண்டர்களின் சாதனா, இணைந்து செயல்படுதல் மற்றும் நடைமுறையில் இதயத்துடன் தொடர்புபடுத்திக்கொள்வதன் முக்கியத்துவம், ஆகியவற்றை ஊக்கப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. கலந்துரையாடலுக்காக நான்கு பொருள்கள் கொடுக்கப்பட்டன. கேட்டலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், தகவல் தொடர்பிற்கான வழிகாட்டுதலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. நிகழ்ச்சி நடந்தபொழுது தெய்வீகமான சூழ்நிலை இருந்தது.

## ஒன்று கூடுதல்
### சவாய் மதோபூர்

மார்ச் 3-ம் தேதியன்று, சவாய் மதோபூர் மையத்திலுள்ள அனைத்து அப்யாசிகளும், சகஜ மார்க்க பயிற்சி மற்றும் கேள்வி-பதில் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஒன்று கூடினர். அந்த செயல்பாடுகள் அனைத்தும், சகோ. அயோத்யா பிரசாத் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டு, ஜெய்ப்பூர் மையத்தைச் சேர்ந்த சகோ. சந்தீப் அவர்களால் நடத்தப்பட்டது. அப்யாசிகள் இரண்டு குழுக்களாக பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு குழுவும் சகஜ மார்க்க பயிற்சியை பற்றி நன்கு புரிந்து கொள்வதற்கான, முக்கியமான கருத்துக்களை வெளிக்கொண்டு வந்தனர். நிகழ்ச்சி முழுவதும், ஒருவருகொருவர் தொடர்புகொண்டு, தகவலை பகிர்ந்து கொள்ளும் வகையில் இருந்தது. அந்த நிகழ்ச்சியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து கருத்துருக்களும், மாஸ்டர்களின் உரைகளிருந்து பெறப்பட்டன. உள்ளூர் அப்யாசிகள் அனைவரும், நன்கு திட்டமிட்டு, இல்லக் கூட்டங்களை நடத்த, ஊக்கமளிக்கப்பட்டது.

## ஆன்மீகம் மற்றும் மருத்துவப் பயிற்சி
### கசராகாட், கேரளா - மார்ச் 11, 2012

"ஆன்மீகம் மற்றும் மருத்துவப் பயிற்சி" பற்றிய கருத்தரங்கம் ஒன்று, மார்ச் 11-ம் தேதியன்று, பேலா, கசார்காட்டில் நடைபெற்றது. கோழிக்கோட்டிலிருந்து 14 மருத்துவர்கள் கருத்தரங்கில் கலந்து கொள்ள, காசராகாட் வந்திருந்தனர். மருத்துவக் கல்வியில் ஆன்மீகத்தின் முக்கியத்துவம் பற்றிய கருத்தை, மருத்துவர்களிடையே ஏற்படுத்தவே இந்த நிகழ்ச்சி ஒருங்கிணைக்கப்பட்டது. தற்பொழுது, மருத்துவ சிகிச்சை, நோயைக் குணமாக்குவதோடு மட்டும் நின்று விடுகிறது. அந்த நோய்க்குப் பின்னால் இருக்கும் மனிதனைப் பற்றி நினைப்பதில்லை. மருத்துவர்கள் தங்கள் வருமானத்தைப் பற்றியே சிந்திக்கின்றனர். நோயாளிகள் தங்களுடைய செலவைப் பற்றி நினைத்து கவலையுறுகின்றனர். மருத்துவர் விரும்பினால், நோயாளியின் மனப்பாங்கில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்களுக்கு ஆன்மீகத்தை அறிமுகப்படுத்த முடியும்

# எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## கட்டுரை எழுதும் நிகழ்வின் சான்றிதழ் வழங்குதல்


பெல்லாரி, கர்நாடகா

இந்தியா முழுவதும் உள்ள மையங்களில், 2011-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர கட்டுரை எழுதும் நிகழ்வில் கலந்து கொண்டு, பல்வேறு நிலைகளிலும் பரிசு பெற்றவர்களைப் பாராட்டும் வண்ணம், விழாக்கள் நடைபெற்றன. வட கர்நாடகாவைச் சேர்ந்த பெல்லாரி, குல்பர்க்கா மற்றும் ஹுப்ளி, தமிழ் நாட்டைச் சேர்ந்த தூத்துக்குடி, திருச்செந்தூர், கோவில்பட்டி, உதகை மற்றும் திருப்பூர், குஜராத்திலுள்ள பூஜ், மெஹசானா மற்றும் வடோதரா, ஜார்கண்டைச் சேர்ந்த ராஞ்சி ஆகிய மையங்களில், இவ்விழா, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் 2012-ல் நடத்தப்பட்டன. மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களும் அழைக்கப்பட்டு, பல்வேறு பிரிவுகளில் பரிசு பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. நமது மிஷனின் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படும் வகையில் உரைகள் நிகழ்த்தப்பட்டதுடன், இக்கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படுவதின் பின்னணிக் காரணங்களும் எடுத்துரைக்கப்பட்டன. ஆர்வத்துடன், மேலும் தெரிந்து கொள்ள விரும்பியவர்களுக்கு, மிஷனின் படைப்பிலக்கியங்கள் கொடுக்கப்பட்டன.


ஹுப்ளி, கர்நாடகா


திருப்பூர், தமிழ் நாடு


தூத்துக்குடி, தமிழ் நாடு


கோவில் பட்டி, தமிழ்


பீதர் , கர்நாடகா


வதோதரா, குஜராத்


பூஜ், குஜராத்


ஊட்டி, தமிழ் நாடு



மேஹ்சானா, குஜராத்


குல்பர்க்கா, கர்நாடகா


ராஞ்சி, ஜார்க்கண்ட்

## விஜயவாடா ஆசிரமம், ஆந்திர பிரதேசம்

விஜயவாடா, மிஷனின் ஒரு பழம்பெரும் மையமாகும். ஆன்மீகத்தின் உயிர் நாடியாக, கடந்த 50 ஆண்டு காலமாக, அப்யாசிகளுக்கு அது தொண்டாற்றி வருகிறது. பாபூஜி மகராஜ் 1959 ம் வருடம் இங்கு வருகை புரிந்த போது, இவ்வாசிரமம் உருவானது. அப்போது ஆறு அப்யாசிகளே இருந்தனர். 1963ம் வருடம், அவர் மீண்டும் வருகை புரிந்து, மூன்று நாட்கள் தங்கி, சத்சங்கங்கள் நடத்தினார். 1967, மே 25 அன்று, பிரசெப்டர் Dr.V. பார்த்தசாரதியின் இல்லத்தின் முதல் மாடியில், தியானக்கூடத்தை அவர் திறந்து வைத்தார். விஜயவாடா மற்றும் அதைச்சார்ந்த பகுதிகள் சூறாவளியால் சீரழிந்த போது, பாபூஜி மகராஜும் அங்கு இருந்தார்.



1967 மே 25 அன்று, தியானக்கூட திறப்புவிழாவில், பாபூஜி மகராஜ் அளித்த அருளுரை

“நம் முன்னோர்கள் உண்மையை அறியும் பொருட்டு வீடு, வாசல், மக்கள் மற்றும் செயல்களைத் துறந்து காட்டிற்கு ஏகினர். ஆனால் சகஜ மார்க்கத்தில், நாம் நம் இல்லங்களிலேயே, நம்மைச் சுற்றிலும், அக்கானக சூழ்நிலையை உருவாக்க முயற்சி செய்வதால், இல்லங்களே அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்கின்றன."

1972, மே 16 அன்று, சகோ. சங்கர வெங்கடப்பைய்யா, நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள, 1672.26 ச.மீ அளவுள்ள இடத்தை நன்கொடையாக வழங்கினார். முக்கிய சாலையில் அமைந்துள்ள இவ்வாசிரமம், ரயில் மற்றும் பேருந்து நிலையங்களிலிருந்து சுமார் நான்கே கி.மீ. தொலைவில் உள்ளது. 1987 மார்ச் 18ம் தேதிஅன்று, 420.ச.மீ பரப்பளவில், தியானக்கூடம், அலுவலக அறை, தங்கும் விடுதி, மற்றும் மாஸ்டரின் குடில் முதலியன அமையப்போகும் இடத்திற்கு மாஸ்டர் அடிக்கல் நாட்டினார். 1995 ஜூலை 24 அன்று, அலகாபாத்தின் Dr. சந்திரிகா பிரசாத் அவர்கள் அதைத் திறந்து வைத்தார். மாஸ்டர், 2002 டிசம்பர் 22, 23 மற்றும் 24 ஆகிய மூன்று நாட்களுக்கு வந்திருந்தார். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அப்யாசிகள் வந்திருந்து மாஸ்டரின் அருளைப்பெற்றனர்.



2005 ம் வருடம், தியானக்கூடத்தின் மீது, நன்கு அமைக்கப்பட்ட தாழ்வாரங்களுடன் கூடிய முதல் மாடி கட்டப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, சகஜ் மார்க் ஸ்பிரிசுவாலிடி ~ஃபவுண்டேஷன் (SMSF)தியானக்கூடத்தின் பின் புறத்தில், 284 ச.மீ. பரப்பளவுள்ள ஒரு கட்டிடம் வாங்கப்பட்டது. கட்டட அமைப்பைப் பூர்த்தி செய்வதற்காக, இதில் சமையல் அறையும், நூலகமும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளன.




SMSF கட்டிடத்தில் இயங்கும் மருத்துவ மையம், அடிப்படை மருத்துவ வசதிகளை கொண்டுள்ளது. ஒவ்வொரு ஞாயிறன்றும் அப்யாசிகளும், மற்றும் உள்ளூர் பொதுமக்களும், மருத்துவர்களின் சேவையை உபயோகித்துக்கொள்கின்றனர். நோயாளிகளுக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



ஆசிரமத்தில், ஞாயிற்றுக்கிழமைகளிலும், புதன் கிழமைகளிலும் நடைபெறும் மாலை சத்சங்கங்களுடன், தினமும் காலையும் சத்சங்கம், நடைபெறுகிறது. ஞாயிறு சத்சங்கத்தில், சுமார் 250 அப்யாசிகள் பங்கேற்கின்றனர். இம்மையம், வரவேற்பு கூட்டங்களையும், அப்யாசி பயிற்சி திட்டங்களையும், VBSE தொடர்பான வேலைகளையும் நியமமாக நடத்தி வருகின்றது. ஒவ்வொரு ஞாயிறன்றும், ஆன்மீக ஆர்வலர்களுக்கான மிஷனைப் பற்றிய விளக்கமும், புது அப்யாசிகளுக்கான தெளிவுரை அமர்வும் நடைபெற்று வருகின்றன. இளைஞர்களின் கலந்துரையாடலும், வழக்கமாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும். ஆசிரம வளாகத்தில், கட்டிட விரிவாக்கத்தைப்பற்றி, இம்மையம் திட்டமிட்டு வருகிறது.



மிஷனின் சாரத்தை ஆதரிக்கும் வண்ணம் செயல் படும் இம்மையம், மாஸ்டரின் கருத்துக்களை மாவட்டம் முழுவதும் பரப்பும் பணியிலும் ஈடுபட்டு வருகிறது

**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.